# மண்-மொழி - மானம் காக்கும் மாமுதல்வர்! மாட்சி ஆட்சி மீண்டும் மீண்டும் மலர்கவே!

ஓரணியில்தமிழ்நா டின்உரிமை நாட்டுவோம் - தமிழர்
ஒற்றுமையாய்த் திரண்டெழுந்தே வலிமை காட்டுவோம்!
வீரமண் நம்மொழி மானம்வெற்றி பாடுவோம்- ஈடில்
வினைத்திட்ப மாமுதல்வர் வியப்பின்ஆற்றல் கூடுவோம்!
(ஓரணி)

மக்கள் பாதுகாப்பியக்க தி.மு.கழகம் - என்றுமே
வாகைசூடும் வழிஅமைக்க உறுப்பினர் சேர்ப்போம்
தக்கதிறமை உறுதிஉழைப் புருவாம்நம் - முதல்வர்
தகைமைசான்ற தடத்தின் புதுமைத் தன்மை சமைப்போம்!
(ஓரணி)

வரலாற்றுப் புகழ்செய் வளர்ச்சி மாட்சிகள் காண்போம் - ஒன்றிய
வல்லாட்சிக் கேபாடம் புகட்டும் நல்வழி பூண்போம்!
இரவுபகல் பாராதே இமைகள்தாமும் மூடாதே - உழைக்கும்
இதயம்வாழும் முத்துவேல் கருணாநிதி இஸ்டாலின்
இணைவோம் (ஓரணி)

ஆண்டாண்டாய் நமைஅடிமை அநீதி ஆக்குவார் - ஒன்றிய
அரசுசெய்யும் வஞ்சகங்கள் அகற்றிப் போக்குவோம்!
நீண்டநெடும் காலமாய் நாம்நெடிதுபோ ராடுவோம் -
இன்னே
நேயமில் மாயதில்லி மமதைதன்னை மாற்றுவோம்!
(ஓரணி)

குருதிசிந்திக் கொடுமைஏற்ற மொழிப்போர்க் களத்தின்
உறுதிக்
கொள்கைவெற்றி இருமொழிநம் குறிக்கோள் வெற்றி
கருதா(து)இன்னல் தரும்இந்தி மும்மொழி புகுத்தும்-தீமைப்
பொல்லா விலங்கைப் பொடிபொடி யாகஉடைப்போம்! ஓரணி)

உலகமெலாம் புகழும்கல்வி உயர்ந்த முறைதமிழ்நாடே
- இதனை
ஒழிக்கஎண்ணும் ஒன்றியத்தின் கொடுங்கோல்
விரட்டுவோம்
நிலம்முதன்மை உச்சகல்வி பயிலும்தமிழ்; மாணவர்கள்-
உரிமை
நிலைநாட்டப் பொருள்தராத கயமையை மாற்றுவோம்
(ஓரணி)

எத்தனையோ எத்தனையோ ஈனம்செய்யும் ஒனறிய
அரசின்
இழிவை நீக்கும் வழிகள்தேர்நம் முதல்வர்பாதை
நடப்போம்!
கொத்தடிமைக் கூட்டம்தமிழ்நாட்டு எதிர்க்கட்சிகள் - செல்லும்
கொள்கையிலாத் தன்மைக்கடந்து வெல்நம் முதல்வர்
வாழ்த்துவோம்! (ஓரணி)

மண்மொழி நம்மானம் காக்கும் கழகம் தி.மு.க.வே
இணையில்
மாண்புமிகு எண்ஒன்று முதல்வர்நம் இஸ்டாலினோ
கண்களைப் போல்மக்களை காக்கும் காப்புத் தெய்வம்
இஸ்டாலினே!
காலம்வென்று மீண்டும் மீண்டும் ஆட்சி காண்பார் வாழ்க
வாழ்கவே! (ஓரணி)



பெருங்கவிக்கோ
**வா.மு.சேதுராமன்**
உலகஅமைப்பாளர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

# மரபணுவிலும் நவீனம்!

## 'கணையாழி' தலையங்கம்!

தமிழின் மரபணுவிலும் நவீனம் சேர்த்த முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கத்தைத் தமிழகத்தின் மரபணுவில் நவீனம் சேர்த்துக் கொண்டிருக்கும் இந்நாள் முதல்வர் தொடங்கி வைத்திருக்கிறார்.

சாகித்திய அகாதமியின் ஃபெல்லோவாக இருந்து வருகிற கணையாழியின் சிறப்பாசிரியர் இ.பா. அவர்களுக்கு இந்த மாதம் 96 வயது! வாழ்த்து பெறுகிறது கணையாழி!

இந்த ஆண்டு தமிழில் இளம் படைப்பாளர் விருதுகளைப் பெற்றிருக்கிறார்கள் லட்சுமிஹரும் விஷ்ணுபுரம் சரவணனும்! வாழ்த்துகிறது கணையாழி!

பேராசிரியர் அறவேந்தனின் விடாமுயற்சியால் சாகித்திய அகாதமியும் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகமும் தமிழ்நாடு அரசும் சேர்ந்து கலைஞரைக் கொண்டாடி இருக்கின்றன.

விடுதலைக்கும் முன்பே 1944-இல் கோரிக்கை வைக்கப்பெற்று விடுதலை இந்தியாவில் நாடாளுமன்றத்தில் 1952 இல் அறிவிக்கப்பெற்று, 1954-இல் தொடங்கப்பட்டிருக்கிறது சாகித்திய அகாதமி!

சாகித்திய அகாதமியின் முதல் பொதுக்குழுவில் இடம்பெற்ற வர்களில் அபுல் கலாம் ஆசாத், ராஜாஜி, சர்வபள்ளி ராதா கிருஷ்ணன் குறிப்பிடத்தக்கவர்கள். அப்போது அகாதமியின் தலைவராக இருந்தவர் ஜவகர்லால் நேரு.

நேரு தலைவராக இருந்த சாகித்திய அகாதமியும் நேரு பெயரில் இருக்கும் பல்கலைக்கழகமும் தமிழ்நாடு அரசுடன் சேர்ந்து கலைஞர் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கத்தை நடத்தியுள்ளன.

தமிழ், செம்மொழியாக அறிவிக்கப்பட வேண்டும் என்பது நூற்றாண்டுக் காலக் கோரிக்கை. ஜூன் 7, 2004 இல் நாடாளுமன்றத்தில் அறிவிப்பு செய்தவர் அப்துல் கலாம்! அறிவிக்கச் செய்தவர் கலைஞர்!

செம்மொழி நிறுவனம் தமிழ்நாட்டில் தொடங்கவும் தன் சொந்த நிதியில் இருந்தே ஒரு கோடி ரூபாயைத் தந்து விருது வழங்கவும் செம்மொழி நிறுவனத்திற்குத் தலைவராகவும் இருந்து குடியரசுத் தலைவர் கையால் தொல்காப்பியம், குறள்பீடம் விருதுகளை வழங்கவும் வித்திட்டவர் கலைஞர்தான்.

அவரது பிறந்த நாளைத்தான் செம்மொழி நாள் என்று அறிவித்திருக்கிறார் தமிழ்நாடு முதல்வர்!

அவரது நூற்றாண்டைத்தான் சாகித்திய அகாதமியும் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகமும் தமிழ்நாடு அரசுடன் சேர்ந்து கொண்டாடி இருக்கின்றன!

தாகூருக்கு 1961-இல், பாரதியாருக்கு 1983-இல், பாரதிதாசனுக்கு 1990-இல், கலைஞருக்கு 2025இல் நூற்றாண்டு விழாக் கருத்தரங்குகளை நடத்தியிருக்கிறது சாகித்திய அகாதமி!

பட்டியலில் சாகித்திய அகாதமி விருது பெறாதவர்களான தாகூர், பாரதியார் போலவே கலைஞரும் இடம் பெற்றிருக்கிறார்.

ஆனாலும் இந்த விழாக் கருத்தரங்கு அரசும் அகாதமியும் ஒரு பல்கலைக்கழகமும் சேர்ந்து நடத்தியது! ஓர் எழுத்தாளரின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சி மேடையில் அவரது குடும்பத்தினர் மட்டுமே கலந்துகொள்ளும் விதியை வைத்திருக்கிறது சாகித்திய அகாதமி! எழுத்தாளரான முன்னாள் முதலமைச்சரின் மகன் இந்நாள் முதல்வராகக் கலைஞர் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கைத் தொடங்கி வைத்திருக்கிறார்! இப்படி ஓர் அரிய நிகழ்வையும் சாகித்திய அகாதமிக்குத் தந்திருக்கிறார் கலைஞர்!

கலைஞர் கதைகளால் வளர்ந்தவர்!

அகத்தியர் வழிபட்ட இடம்! பாண்டவர்கள் வழிபட்ட கோயில்!

தேவார மூவர் பாடிய ஊர்! சேக்கிழார் கொண்டாடிய ஊர்! புலவர் குண்டையூர்க் கிழாருக்கு மதுரைச் சொக்கநாதர் மீனாட்சியுடன் காட்சி தந்த ஊர்! சோழர், பாண்டியர் காலக் கல்வெட்டுகள் இருக்கும் ஊர் என்று புராணக் கதைகளும், வரலாற்றுக் கதைகளும் தந்தை சொல்லும் இராமாயண, மகாபாரதக் கதைகளுமாக நிரம்பி வழியும் திருக்குவளையில் பிறந்திருக்கிறார் கலைஞர்!

மனித குல வரலாறு கதைகளால் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. கதை கேட்கும் விருப்பத்திற்குக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விதிவிலக்கு இல்லை!

கதை கேட்கும் விருப்பம் கடவுளுக்கும் உண்டு என்பதைக் கதைகளே சொல்கின்றன! கதைகள் இல்லாத கடவுள் உண்டா? கதைகள்தாம் மன உலகில் நம்பிக்கையை உருவாக்குகின்றன!

பழைய நம்பிக்கையைக் காப்பாற்றப் பழைய கதைகள்!

ஆனால், கலைஞர் பழைய கதைகள் உருவாக்கியுள்ள நம்பிக்கை மன உலகில் வாழ மறுத்தவர்! மன உலக நம்பிக்கையை மாற்றிடப் புதிய மன உலகை உருவாக்கப் பழைய கதைகளில் நவீனத்தைச் சேர்த்தவர்!

நளாயினி போன்ற புராணக் கதைகளையும் நவீனக் கண்ணோட்டத்தில் பார்க்கச் சொன்னவர்!

நாடகத்தில் சாக்ரடீஸ் உயிரைக் காப்பாற்றிக் கொடுத்தவர்!

தொல்காப்பியப் பூங்கா, குறளோவியம், சங்கத்தமிழ், சிலப்பதிகாரம் என்று தமிழின் மரபணுவிலும் நவீனம்! கொண்டாடி இருக்கிறது சாகித்திய அகாதமி!

அன்புடன்
**ம.ரா.**

- நன்றி
கணையாழி - ஜூலை 2025

## இராமேசுவரம் - இராமநாத சுவாமி திருக்கோயிலின்

# 6 பணியாளர்களுக்கு அர்ச்சகர்களாக பதவி உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணைகளை வழங்கினார் !

*சென்னை, ஜூலை 5- திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.10.57 கோடி செலவில் கட்டப்பட்ட பக்தர்கள் தங்கும் விடுதியினை காணொலி வாயிலாக திறந்து வைத்து, இராமேசுவரம் இராமநாத சுவாமி திருக்கோயிலின் 6 பணியாளர்களுக்கு அர்ச்சகர்களாக பதவி உயர்வு ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.*

கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின்படி, விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம், தி.குன்னத்தூர் ஊராட்சியில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர். பொன். கௌதமசிகாமணி மண், மொழி, மானம் காக்க இணைவோம் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற புதிய உறுப்பினர் சேர்க்கையை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் ஒன்றிய செயலாளர் மு.தங்கம், ஒன்றிய நிர்வாகிகள் தீனதயாளன், ஏழுமலை, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பாலமுருகன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் விஜயரங்கம், உள்ளாட்சி பிரதிநிதிகள், பி.எல்.ஏ.2, பி.டி.ஏ., கிளைச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.

*முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.7.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 10.57 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள 52 அறைகளுடன் கூடிய பக்தர்கள் தங்கும் விடுதியினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். மேலும், இராமேசுவரம் இராமநாத சுவாமி திருக்கோயிலின் 6 திருக்கோயில் பணியாளர்களுக்கு அர்ச்சகர்களாகப் பதவி உயர்வு வழங்கி, அதற்கான ஆணைகளை வழங்கினார்.*

*இந்து சமய அறநிலையத் துறையானது தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது. மேலும், பக்தர்கள் அதிகளவில் வருகை தரும் திருக்கோயில்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவினை ஏற்படுத்தி, பக்தர்களின் அனைத்து தேவைகளும் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன.*

*அந்த வகையில், அறுபடை வீடுகளில் இரண்டாம் படைவீடாக திகழும் திருச்செந்தூர், சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு உபயதாரர் நிதி மற்றும் திருக்கோயில் நிதியின் மூலம் பெருந்திட்ட வரைவின்கீழ், 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வரிசை முறை, காத்திருப்பு அறை, மருத்துவமையம், முடிக்காணிக்கை செலுத்தும் இடம், பொருட்கள் பாதுகாப்பு அறை, அன்னதானக்கூடம், பக்தர்கள் தங்கும் விடுதிகள், சுகாதார வளாகம், திருமண மண்டபங்கள், பணியாளர் குடியிருப்பு ஆகிய திருப்பணிகளின் கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் 28.09.2022 அன்று தொடங்கி வைத்தார். அத்திருப்பணிகளில் 33.25 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்ட முடிகாணிக்கை மண்டபம், வரிசை வளாகம், சுகாதார வளாகங்கள், கலையரங்கம், நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் நீரேற்று நிலையம், ஆகியவை கடந்த 14.10.2024 அன்று முதலமைச்சர் அவர்களால் பக்தர்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டன.*

*அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் 10 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 52 அறைகளுடன் கூடிய தங்கும் விடுதியினை பக்தர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.*

*இந்த அரசு பொறுப்பேற்றபின் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் கடந்த 4 ஆண்டுகளில் 11,712 திருக்கோயில்களில் மேற்கொள்ளப்பட்ட 7,006 கோடி ரூபாய் மதிப்பிலான 26,695 பணிகளில் இதுவரை 3,526 கோடி ரூபாய் மதிப்பிலான 13,541 பணிகள் நிறைவு பெற்றுள்ளன.*

*மேலும், இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம் இராமநாத சுவாமி திருக்கோயிலில் கைங்கர்யம் பணியிடத்தில் பணிபுரிந்து வந்த 6 திருக்கோயில் பணியாளர்களுக்கு அர்ச்சகர்களாகப் பதவி உயர்வு வழங்கி, அதற்கான ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

*காணொலிக் காட்சி வாயிலாக திருச்செந்தூரிலிருந்து இந்து சமய அறநிலைத் துறை கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் க.இளம்பகவத், கூடுதல் ஆணையர் பொ.ஜெயராமன், திருக்கோயில் தக்கார் ஆர்.அருள்முருகன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை நகரம், 106 வது வாக்குச்சாவடியில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்து சிறப்பித்தார். நகரச செயலாளர் ம.அன்பழகன் ஆ.சம்பத்குமார், மு.க.அருள்நிதி, நகர மன்ற தலைவர் காவியாவிக்டர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பி.சுதா, நகர மன்ற துணைத் தலைவர் இந்திரா பெரியார்தாசன், மகேந்திரன், வசந்தகுமார், பாஸ்கர், சம்பத், இனியன், காளியப்பன், சி.எஸ்.பெரியார் தாசன் அறிவழகன், முனிசாமி, நாகராஜ், ராஜா, இஸ்மாயில், தமிழ்வாணன் பிரசாத், வித்யா சுரேஷ், புன்னகைகமலசேகரன், சக்கரவர்த்தி, சிவக்குமார், மாலதிரமேஷ்பாபு, சாந்திராஜேந்திரன், தேவராஜி மற்றும் பலர் உடன் இருந்தார்கள்.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**இராசிபுரம் கே. இராமசாமி**
**ஜூலை 5 (2000)**

சேலம் மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவராகவும், திராவிட இயக்கத்தின ஆரம்ப கால உறுப்பினராகவும் இருந்தவர்.

இராசிபுரம் ஒன்றியம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம் என இரு ஒன்றியங்களில் செயலாளராக இருந்தவர். பேரூர்க் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

இராசிபுரம் கூட்டுறவு நிலவள வங்கித் தலைவராகவும், தமிழ்நாடு மாநில நிலவள வங்கி இயக்குனநராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் 1999ஆம் ஆண்டு "மாநில சிறந்த கூட்டுறவாளர்" விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**திருமதி பார்வதி நாராயணசாமி**
**ஜூலை 5 (2023)**

தனது இளமைப்பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு கழக மகளிர் அணியில் பணியாற்றத் தொடங்கியவர்.

வடசென்னை மாவட்டம், ஆர்.கே.நகர் பகுதி மகளிர் அணி அமைப்பாளராக மூன்று முறையும், மாவட்ட மகளிர் அணி தலைவராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தில் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மக்கள் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.